# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 12. தொலைத்தொடர்பு சேவை நிலையங்கள் / இலத்திரனியல் விற்பனை நிலையங்கள்

தொலைத்தொடர்பு / அச்சுப்பிரதி சேவைகளை வழங்குமிடங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை விற்பனை செய்யுமிடங்கள்.

**பிரத்தியேக தகவல்கள்/ வழிகாட்டல்கள்** (பொதுவான விற்பனை நிறுவனங்களுக்குரிய அதே பரிந்துரைகள் பின்பற்றப்பட வேண்டும்- கீழே பார்க்கவும்).

**இயக்குனர் / உரிமையாளர் / ஊழியர்கள்**

- தொலைபேசிச் சேவைகளை வழங்குவதைத் தவிர்த்தல் நன்று.
- தொலைபேசிச் சேவைகளை வழங்குவதாயின் பரிந்துரைக்கபட்ட முறைகளுக்கமைய தொலைபேசிகள் தொற்றுநீக்கம் செய்யப்படுவதனை உறுதிசெய்க.
- உங்களது விற்பனை நிலையத்தில் பெறக்கூடிய பொருட்களது பட்டியலினை (இலத்திரனியல் பொருள் விற்பனை நிலையமானால்) தங்கள் இணையத்தளத்தில் வெளியிடுங்கள் அல்லது வாடிக்கையாளர்கள் தொடர்பு கொண்டு கையிருப்பில் உள்ள பொருட்கள் குறித்து அறிந்து கொள்வதற்கான தொலைபேசிச் சேவையினை வழங்குதல்.
- கடனட்டை வாசிப்பு இயந்திரத்தில் (*Credit card reader machine*) வாடிக்கையாளர்களே கடன் அட்டையினை உட்செலுத்த வேண்டும்.
- கடைக்குள் இருப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உள்ளே அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை வாசலில் முக்கியமாகக் காண்பிக்கவும்
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாகத்தின் உரிமையாளரின் / வேலை வழங்குனரின் / மேலாளரின் பொறுப்பு ஆகும்.

**பொதுவான விற்பனை நிலையங்களுக்கான பரிந்துரைகள்**

- முகக்கவசங்கள், தொற்றுநீக்கிகள் போன்றவை போதுமானளவு உள்ளதாவென தினமும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் தேவைக்கேற்ப ஆகக்குறைந்தளவான ஊழியர்கள் இருக்கத் தக்கதாகத் திட்டமிடுதல்.
- ஊழியர்கள் தமது சுயபாதுகாப்பை உறுதி செய்து கொள்வதுடன் முகக்கவசங்களை அணிந்து கொள்ள வேண்டும். கைச் சுகாதாரம் தொடர்பில் கவனத்தைச் செலுத்துவதுடன் தும்மும் போது மெல்லிழைத் தாளினால் அல்லது முழங்கையினால் மூக்கினையும் வாயினையும் மறைத்துக் கொள்ளுதல் வேண்டும்.
- நுழைவாயிலில் உடல் வெப்பநிலையைக் கண்காணிக்கும் பொறிமுறையானது செயற்படுத்தப்படலாம்.
- மக்களின் வருகையினைக் குறைப்பதுடன் விற்பனை நிலையத்தினுள் வாடிக்கையாளரது எண்ணிக்கையைக் குறைவாகப் பேணவும் -குறிப்பிட்ட எண்ணிக்கையான வாடிக்கையாளர்களே உள்நுழைய அனுமதிக்கப்பட வேண்டும்- எத்தனை வாடிக்கையாளர்கள் உள்நுழையலாம் என்ற விபரங்கள் வாயிலில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
- காற்றோட்டத்தினை சீராகப் பேணவும். வளிப்பதனாக்கியின் சாதாரணமான இயக்கத்தினை உறுதிப்படுத்தவும். சுத்தமான காற்றோட்டத்தை அதிகரிக்கவும்.
- அடிக்கடி தொடுகையுறும் பொது பொருட்கள் மற்றும் வசதிகளை சுத்தம் செய்து கிருமி நீக்கம் செய்யுங்கள்

- வாடிக்கையாளர்கள் பணம் செலுத்துவதற்கும் வெளியேறுவதற்கும் வரிசையில் காத்திருக்கும் போது தமக்கிடையே பாதுகாப்பான இடைவெளியினை பேணவேண்டும் என்பதனை ஞாபகம் ஊட்டுவதற்காக 'வரிசையில் ஒரு மீற்றர் இடைவெளி' என்ற (வரிசையில் நபர்களுக்கு இடையில் ஒரு மீற்றர் இடைவெளி விட்டு காத்திருப்பதற்கான) வாசகமானது காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

**பயனாளர்/ வாடிக்கையாளர்/ எமக்கு**

1. இலத்திரனியல் உபகரணங்களை வாங்கச் செல்லுபவர்கள் தாம் வாங்கவேண்டிய பொருட்களை முன்னதாகவே திட்டமிட்டுக் கொள்வதன் மூலம் விற்பனை நிலையத்தில் செலவு செய்ய வேண்டிய நேரத்தைக் குறைத்துக் கொள்ள முடியும். இயலுமாயின் நீங்கள் வாங்கவுள்ள பொருட்களின் பட்டியலை விற்பனை நிலையத்திற்கு அனுப்புவதன் மூலம் அவற்றைத் தயாராக வைத்திருக்கும்படி செய்யலாம்.
2. விற்பனையாளரிடம் கடனட்டையை வழங்காது வாடிக்கையாளரே கடனட்டையை கடனட்டை வாசிப்பு இயந்திரத்தில் தேய்க்க வேண்டும்.
3. இயன்றவரையில் இணையவழிக் கொள்வனவு முறையையும் இணையத்தினூடான கொடுப்பனவு முறையையும் மேற்கொள்ளுதல்.
4. அலைபேசிச் சேவை மற்றும் இணையசேவைகள் ஆகியவற்றிற்கான முற்கொடுப்பனவு மீள்நிரப்பு சேவைகளையும் இணையத்தினூடாகவே மேற்கொள்ளுதல்.
5. ஊடக இயக்கிகளை (*media*) அணுகும்போது உங்கள் தனிப்பட்ட செவி ஒழி பெருக்கிகளைப் (*Headphone*) பயன்படுத்தவும்.

**அறிவுறுத்தும் முறைகள்**

- விற்பனை நிலையங்களின் நுழைவாயில்களில் சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தல்.
- சமூக ஊடகங்களின் வாயிலாகவும் வெகுசன ஊடகங்களின் வாயிலாகவும் இவை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.



சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.



28.06.2020